# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 5/2016 நாள்: 27.09.2016

### வாக்குப்பெட்டிகள்/மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்

நகர்ப்புற பகுதிகளில் வாக்குப்பதிவிற்கு 34,515 மின்னணு கட்டுப்பாட்டு இயந்திரங்களும் 41,418 மின்னணு வாக்குப்பதிவு கருவிகளும் மொத்தம் 75,933 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

இதில் ஒடிசா மாநிலத்திலிருந்து 12000 மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் தமிழ்நாட்டிற்கு தற்போது வந்து சேர்ந்துள்ளன.

26.9.2016 முடிய 20 மாவட்டங்களில் 42610 மின்னணு கட்டுப்பாட்டு இயந்திரங்கள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் ஆகியன முதல் கட்ட பரிசோதனை பாரத் மின்னணு லிமிடெட் நிறுவனப் பொறியாளர்களால் முடிக்கப்பட்டுள்ளது. இன்று முதல் எஞ்சிய 12 மாவட்டங்களிலும் முதற்கட்ட பரிசோதனை பணி துவங்குகிறது.

நடைபெறவுள்ள தேர்தலில் வாக்குப்பதிவிற்கு ஊரக பகுதிகளில் 2,17,500 வாக்குப்பெட்டிகள் பயன்படுத்தப்பட உள்ளன.

இதில், ஆந்திர மாநிலத்திலிருந்து 6000 ஜம்போ சைஸ் வாக்குப் பெட்டிகள் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் மூலம் பெறப்பட்டு இன்று நகர்வுப்பணி துவங்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி, அரியலூர், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு இவ்வாக்குப் பெட்டிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி).

27/09/16

மக்கள் தொடர்பு அலுவலர்